[1992 மார்ச் 19]

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் கொண்டு வந்த இந்த சத்துணவுத் திட்டத்தைத் தொடர்ந்து தமிழக அரசே செயல்படுத்த வேண்டுமென்ற உறுதியோடு இருக்கின்ற மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய அரசு இந்தக் கோரிக்கையை பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளாது. (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 276, செல்வி கோ. மல்லிகா. மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

276—

கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கத்தின் மூலமாக கறவை மாடுகள் வாங்க மானியம்.

*1244 செல்வி கோ. மல்லிகா :

மாண்புமிகு ஆதிதிராவிடர்நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புவனகிரி தொகுதியில் சேத்தியாதோப்பில பால் குளிரூட்டு நிலையத்திற்குத் தேவையான பால் கிடைக்க, ஆதிதிராவிடர் மற்றும் பின்தங்கிய வகுப்பினருக்கு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கத்தின் மூலமாக கறவை மாடுகள் வாங்குவதற்கு மான்யம் வழங்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், விவரமென்ன ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) புவனகிரி தொகுதியில் தற்போது செயல்பட்டு வரும் 13 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களில் இந்நிதி ஆண்டில் தாட்கோ மற்றும் ஆதிதிராவிடர் நல திட்டங்களின் மூலம் எட்டு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களுக்குக் கறவை மாடுகள் வழங்க தெரிவு செய்யப்பட்டுள்ளது.

செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிட பெருங்குடி மக்களின் விடிவெள்ளி நமது இதயத் தெய்வத்தின் பொற்கால ஆட்சியில் 8 சங்கங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்ததற்கு நன்றி. எந்தெந்த இடங்கள் அவை என அறிவிக்க இயலுமா ? இந்த கடன் தொகை எப்போது வழங்கப் படும் என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிமுட்லூர், நெல்லிக்கொல்லை, துரிஞ்சிர் கொல்லை, மஞ்சக்கொல்லை, பி.உடையூர், தெற்குதிட்டை தடட்டாம்பாளையம், எக்கம்பூர் ஆக 8 கூட்டுறவுச் சங்கங்களுக்கும் 184 கறவை மாடுகள் வாங்குவதற்கு ஆணை பிறப்பிக்கப் பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 277 திரு. எஸ். டேனியல்ராஜ், மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர்.

277—

மீனவர்களுக்கு ஓய்வூதியம்.

*4362 திரு. எஸ். டேனியல்ராஜ் :

மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

மீனவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

முற்பகல் 10-25

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே :

மீனவர்களுக்கு ஓய்வூதியம் அளிக்க இன்சூரன்ஸ் மற்றும் ஓய்வூதியம் சிறப்புத் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலில் தொழிலில் ஈடுபட்டு, வேலை செய்ய முடியாத வயதான மீனவர்களுக்கு கேரள மாநிலத்தில் தற்போது ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. அதைப் பின்பற்றி, மீனவர் நலனில் அக்கறை கொண்டுள்ள இந்த அரசு மீனவர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலங்களில் விபத்து காப்புறுதித்திட்டத்தின் கீழ் மீனவர்கள் தொழிலாற்றும்போது அல்லது விபத்திலே இறந்தால் அவர்களுக்கு ரூபாய் 15,000 வழங்கப்பட்டு வந்தது. அதைப்போல மீவர்கள் ஊனமடைந்தால் அவர்களுக்கு ரூ. 7,500 வழங்கப்பட்டு வந்தது. ஆனால் நமது தாயுள்ளம் பொருந்திய, கருணை உள்ளம் கொண்ட, கொடைத்தன்மை கொண்ட ப்பற்ற தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் கருணை உள்ளத்தோடு, விபத்துக் காப்புறுதித் திட்டத்தின்கீழ், மீனவர்கள் இறந்துவிட்டால் ரூ. 15,000 என்று இருந்ததை